**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**O.S. No. 109/2024**

வாக்குமூலம்: வா.சா.1 – அய்யம்மாள்

**04.02.2026 : சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

தாவா சொத்தில் உள்ள சர்வே எண் என்ன என்றால் எனக்குத் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்து கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எந்த சர்வே நம்பரில் உள்ள சொத்திற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே நம்பர் தெரியாது. சர்வே நம்பர் என்ன என்பதே தெரியாமால் நான் பொய்யாக வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் உள்ளது. தாவா சொத்திற்கு கிழமேல்அடி மற்றும் தென்வடல் அடி எவ்வளவு என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மொத்தம் எத்தனை சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சதுரடி தெரியாது, 14 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணமான வழக்கு சொத்திற்கான வில்லங்கச் சான்று எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சொத்திற்கு நான்கு மால் விபரம் தெரியுமா என்றால் கிழக்கு ரோடு மேற்கே கோவில் இடம், வடக்கு ரோடும், தெற்கு மூர்த்தி வீடும் உள்ளது. மேற்படி நான்குமால் விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பின்பு அதே சர்வே எண்ணிற்கு அப்போது பட்டா வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் பிராதில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.395/1, UDR சர்வே படி 395/1A க்கான பட்டாவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் ஆன பட்டா சர்வே எண்.395/28 ற்கான பட்டா ஆகும். மேற்படி ஆவணம் வழக்கு சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தான சர்வே எண்.395/1, UDR சர்வே படி 395/1A க்கான பட்டா வாங்கவில்லை என்றாலும், எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.395/28 க்கான பட்டாவை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான்

இவ்வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகிய ஆவணங்கள் என் கணவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தை நான் கிரையம் பெற்றிருந்தால் வருவாய் ஆவணங்கள் எனது பெயரில் தான் இருந்திருக்கும் என்றாலும் பொதுவாக எனது கணவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் மற்றும் மின்இணைப்பு பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. பிராதில் சொத்து வரி, மின் இணைப்பு பற்றி சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தான சர்வே எண்.395/1, UDR சர்வே படி 395/1A எண்ணில் உள்ள சொத்து பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தானது பட்டா எண்.568 நத்தம் சர்வே எண்.395/84, வார்டு 9 சதுரடி 764 க்கு சொத்தானது பிரதிவாதியின் தாயார் அவர்களுக்கு பழனி, நத்தம் நிலவரித் திட்டம் தனிவட்டாட்சியர் அவர்களால் தோராயப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நத்தம் நிலவரி திட்டத்தால் வழங்கப்பட்ட பட்டாவானது பழைய பதிவு எண்.395/3 பா என்றும், புதிய புல எண்.395/84 என பட்டா எண்.568 என வழங்கப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவில் 0.00.71 ற்கு அதில் கூரைவீடு உள்ளது என்று பிரதிவாதியின் தாயார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. கூரை வீடே இல்லை. மேற்படி பட்டாவில் உள்ள சொத்திற்கு 15.03.1994 மற்றும் 07.04.1996 தேதிகளில் பிரதிவாதியின் தாயார் பெயரில் கிஸ்தி செலுத்தி வரப்படுகிறது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. அதுப்படி சர்வே எண்.395/84 ல் உள்ள சொத்தானது பிரதிவாதியின் தாயாரின் சுவாதீனத்தில் இருந்து வரப்பட்டது என்றாலும், அதன் பின் அவரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் தாயார் இறந்த பின்பு மேற்படி சர்வே எண்.395/84 ல் உள்ள சொத்தை பிரதிவாதியின் பெயரிலும், பிரதிவாதியின் சகோதரர் பெயரிலும் 04.02.2021 ஆம் தேதி கூட்டாக பழனி தலைமை துணை வட்டாட்சியரிடம் கூட்டு பட்டா பெற்றுள்ளார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது.

சர்வே எண்.395/84, 85, 86 ல் உள்ள சொத்துக்களை பிரதிவாதியும் அவரது சகோதரரும் கடந்த 19.03.2021 ஆம் தேதி பாகப்பிரிவினை செய்து ஆவண எண்.1031/2021 ல் பதிந்த பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.395/84 பிரதிவாதிக்கு 1ஆம் லக்க சொத்தாக பாத்தியப்பட்டுள்ளது

என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டு நான்குமால் கண்டு பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.395/84 ல் உள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அளவீடு செய்ய வேண்டும் என்று 14.10.2024 ஆம் தேதி வருவாய் துறை நில அளவையரிடம் மனு கொடுத்தார் என்றாலும், அந்த மனு N123/13/006882 என எண்ணிடப்பட்ட கடந்த 18.10.2024 ஆம் தேதி நெய்க்காரப்பட்டி குறுவட்ட அளவையர் மூலம் அளவீடு செய்து அறிக்கையும் வரைபடமும் கொடுத்துள்ளார் என்றாலும் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் அதனை மறைத்து வழக்கில் குறிப்பிடாமல் உள்ளேன் என்றாலும் சரியல்ல. பிராதில் பிரதிவாதி எங்கள் இடத்திற்குள் வந்து அத்துமீறி கற்கலை ஊன்றினார்கள் என்றாலும் அதனை நாங்கள் பிடுங்கி விட்டோம் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பிராது சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கோரி விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. உரிமை கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 ல்உள்ள சர்வே எண்ணும் வா.சா.ஆ.3 ஆவணத்தில்உள்ள சர்வே எண்ணும் ஒரே சொத்துக்கான சர்வே எண் தான் என்று சொல்வதற்கு ஆதரவாக வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ம் மற்றும் வா.சா.ஆ.6 ஒரே சொத்திற்கான ஆவணமாக இருந்திருந்தால் நான் கார்லேசன் சான்றிதழ் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.3 ல் உள்ள சர்வே எண்.395/28 ஆனது தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால் பிராதில் தற்போதைய சர்வே எண்.395/28 என குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் வழக்குச் சொத்தின் சர்வே எண்.395/28 என்று தாக்கல் செய்துவிட்டு பிராதில் சர்வே எண்.395/1A என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

**ஒம்/−சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி**